
---


தாயுமானவர்
ஆன்மீக ஞானியா? அரசியல் ஞானியா?
மன்னார்குடி பானுகுமார்.
ராஜம் பதிப்பகம்
இணையதளத்தில் banukumar.in

# தாயுமானவர்

## ஆன்மீக ஞானியா? அரசியல் ஞானியா?

ஆஉறா! தாயுமானவர் வாழ்வில் ஆன்மீக ஒளியின் ஆனந்த வெளிப்பாடு எவ்வளவு உன்னதமாக இருந்தது.

ஆன்மிகச் சாதனையிலும் அரசியல் அரங்கிலும் ஆனந்தமே!

தாயுமானவர் சிறுவயதிலிருந்ததே ஆன்மீகச் சாதனை புரிந்தார்.

ஒன்றையடுத்த ஒன்றாக அவர் பல ஆன்மிகச் தேடல்களை மேற்கொண்டார். ஒவ்வொன்றின் மூலமாகவும் அதனதன் லட்சியத்தை அடைந்தார்.

அவரது போராட்டங்கள் அடத்தடுத்து அவருக்கு ஞான ஆனந்தத்தை அளித்த வண்ணம் இருந்தன.

தமது ஆன்மீகப் பயிற்சிகளின் நிறைநிலையில் ஆனந்த ஆன்மிக நீரோட்டகளின் சங்கமாகவும் அவர் மாறினார்.

தான் பெற்ற அனுபவங்களின் நிறைவில். அவர் மகிழ்ச்சியும். ஆனந்தமும் பொங்கி வழிய முந்தையதைவிட திவிரமான மற்றோர் ஏக்கத்தால் பீடிக்கப்பட்டார்.

தாயுமானவர். நாயக்க மன்னரிடம் கருவூல அமைச்சராக திறம்பட நிர்வாகம் செய்து வந்தார்.

தசரத மன்னனைப் போல் ஒரு கையில் நிர்வாகத்தையும் ஒரு கையில் ஞானத்தையும் பின்பற்றி வாழ்ந்து வந்தார்.

## சேது நாட்டில் போர் மேகங்கள்

தாயுமானவர் சிறந்த அரசியல் ஞானியாகவும், சிறந்த போர்த்தளபதியாகவும் இருந்ததை இங்கு நாம் சிந்திக்கலாம்.

தாயுமானவர் தவநிலையில் - ஞானத்தின் உச்சியில் உயர்ந்து கொண்டிருந்த காலம்.

இராமநாதபுரம் சமஸ்தானம் அல்லது ராம நாடு (Ramnad Estate) என்பது, இந்தியாவின் தமிழ்நாட்டின், இராமநாதபுர மாவட்டத்தை உள்ளடக்கிய பகுதிகளாகும்.

சேது என்னும் கடல் பகுதியை காக்கும் பொறுப்பில் இருந்த, மன்னர்கள் தங்கள் பெயருக்குப் பின் சேதுபதி எனும் பட்டத்தை இட்டுக் கொள்வார்கள்.



**சேது எனில்** சேது சமுத்திரம் என்னும் கடல் பகுதி, பதி எனில் காவலர் எனப்பொருள்படும். சேதுபதிகளா இருந்த இலங்கையை சேர்ந்தவர்கள் சேது காவலர்கள் என்ற பெயரால் அறியப்படுகிறார்கள்.

இன்றளவும் இலங்கையில் சேதுகாவலர் என்ற பெயரில் வாழ்ந்து வருகிறர்கள்.

தாயுமானவர், திருச்சி நாயக்க மன்ன அரசரின் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, சேது நாட்டை ஆண்ட மன்னர் கிழவன் சேதுபதி இரகுநாத நாயக்கர் ஆட்சியில் இருந்தார்.

இவரது ஆட்சியின் போது இவரது நெருங்கிய அரச உறவினரான கட்டையத் தேவர் என்பவரும் வாழ்ந்திருந்தார்.

இத்தேவருக்கும் சேதுபதிக்கும் இடையில் குடும்பப் பகை ஏற்பட்டது.

சேதுபதி, தேவருக்கு எவ்வளவோ அறிவுரையும் அன்பையும் வழங்கியும் ஒரு பாதிரியாரின் துர் போதனையால் அது ஏறவில்லை. சகுனிகள் எல்லா இடத்திலும் இருப்பது இயற்கை அல்லவா?


பகைமை முற்றி அரண்மனையில் குழுப்பங்கள் பல நிகழ்ந்தன. அது நாட்டிலும் பரவியது.

தேவருக்கும் நாட்டில் செல்வாக்கிருந்து. நாட்டுத் தலைவர்களில் பலர் தேவரை ஆதரித்தனர். அரண்மனை இரண்டு பட்டது போல நாடும் இரண்டு பட்டிருந்தது.

இந்த நிலையில் போர்த்துக்கீசியர் சேது நாட்டின் மேல் குறிவைத்து ஒரு பெரிய கப்பல் படையுடன் இலங்கை வழியாக இராமேசுவரம் தீவில் இறங்கினர்.

---





இராமனாதசுவாமி கோயில் கோபுரத்தில் தமது நாட்டு கொடியைப் பறக்க விட்டு இத்தீவு நம்மது என்று ஆர்ப்பரித்தனர்.

இதைக் கண்ட சேதுபதி நாட்டின் குழப்ப நிலை கண்டு திகைத்தார். செய்வதறியாது நிலை தடுமாறினார்.சோர்வுற்றார்.

படை வீரர்களில் பிளவு, படைத் தலைவர்களின் உளவு, அமைச்சர்களிலும் அதே விளைவு.

பாவம் சேதுபதி என்ன செய்வார்? புழுங்கினார். பொறி கலங்கினார். செய்வதறியாது தடுமாறினார். நல்லவர்களுக்கு சோதனை வந்தாலும் இறையருள் அவர்களை கைவிடாதல்லவா?

---

(இந்த படைஎடுப்புச் செய்தி - யாழ்ப்பாணம் கல்வெட்டித் துறை திரு சாமிப் பிள்ளை அவர்கள் வழங்கிய குறிப்பாகும். தமிழகத்தில் 18.3.1962 வெளிவந்த இந்து இதழ் தரும் செய்திகள் சான்றாக உள்ளன.)

## தாயுமானவர் ஒரு அரசியல் ஞானி!

தவசீலராகிய தாயுமானவர், சேது நாட்டின் நிலையையும் மன்னரின் நிலைமையையும் அறிந்தார்.

சேது நாட்டின் சீர்கேட்டைச் சிந்தித்தார். அன்னியர்களின் படை எடுப்பை அவரது உள்ளம் அணு அளவும் அனுமதிக்கவில்லை.

தவச் சாலையினின்றும் தவநிலையில் இருந்தும் வெளியே வந்தார். சேதுநாட்டின் ஆட்சி முடிவுறும் காலம் அருகில் வருவது போலவும், அரசருக்கு, நகர் நீங்கு காண்டத்தில் பிரிவுப் படலம் வாசிக்கப்படுவது போலவும் உணர்ந்தார்.

தவ முனிவரல்லவா? உள்ளம் இரங்கினார். வாடிய பயிரைக் கண்டாலும் வாடும் பயிரல்லவா? இது கண்டு பொறுப்பாரா? இறைநிலை, சேதுபதிக்கு தாயுமானவர் வடிவில் உதவ தயாரானது.

ஒரு போதும் எவரையும் போய்ப் பார்த்தறியாதவது தவமுனிவர் தாயுமானவர். அரசியல் சாணக்கியராக வடிவெடுத்தார்.

தேவரையும் சேதுபதியையும் தனித்தனியே கண்டு பேசினார். நாட்டில் புகுந்தார்.

---

நாட்டில் உள்ள பாளையக்காரர்களும் பட்டாதாரிகளும், தலைவர்களும், பழைய இராணுவ வீரர்களும் உறங்கி இருப்பது போன்ற நிலையைக் கண்டார்.

கிராமங்கள் தோறும் கால் நடையாகச் சென்று சென்று மக்களைத் தட்டி எழுப்பினார்.

அவர்களிடம் படிந்திருந்த சோம்பலை சாம்பலாக்கினார். சோம்பலை ஊதிப் பறக்கவிட்டார்.




தேசியக்கனலை எழுப்பினார். நாட்டுப் பற்றை ஊட்டினார். குறிப்பிட்ட நாளிலே, எல்லோரையும் - விரைந்து இராமனாதபுரம் அரண்மனைக்கு வந்து சேரும்படி செய்தார்.

குறித்த நாளில்- சேதுபதியும், தேவர் முதல் அனைத்து படை வீரர்களும், படைத்தலைவர்களும் இடம் கொள்ளாது திரளாகக் குழுமியிருக்கிறாகள்.

இடம் இராமலிங்க விலாசம். ஏகமானதாக கூட்டத்தின் தலைவராகத் தாயுமானவர் தேர்ந்தெடுக்கப் பெற்றார்.

தலைவர் தமது முன்னுரையைச் சுருக்கி முடித்தார். சேதுபதியின் ஆணை பிறந்தது. சேதுபதி பேசத் தொடங்கினார்.

மந்திரி பிரதானிகளே! சேனைத் தலைவர்களே! பகைவர்கள் தலைக்கு மேல்

படை எடுத்துத் தலைவாசலில் வந்து இருக்கிறார்கள்.

நமது ரவிகுலச் சேதுபதிகள் தோன்றிய காலம் தொடங்கி இதுவரை இந்த நாட்டிற்கு ஏற்படாத மிகப் பெரியதொரு சோதனை என் காலத்தில் இப்போது ஏறபட்டிருக்கிறது.

நாம் எந்த நாட்டின் மீதும் போர் தொடுக்கவில்லை. அந்த ஆசையும் நமக்கில்லை.

போர்த்துக்கீசியர்கள் நமது சுதந்திர மாளிகையை இடித்து. அதன் கற்களைக் கொண்டே தங்கள் சுதந்திர மாளிகையை நிறுவப் படை எடுத்திருக்கிறார்கள்.

நாடு அவர்கள் கையில் வீழ்வதா? நாம் மானம் இழந்து அவர்கள் காலடியில் வாழ்வதா?

சேது நாட்டு சிந்தனையின்றிச் சிவனே என்று இருக்கிறது. மஞ்சடர்ந்த வானவெளியல் சேதுநாட்டின் தீரமெல்லாம் பஞ்சுபோலாகி வானத்தோடு வானமாய்க் கலந்து விட்டது போலவும் காணப்படுகிறது.

இனி என்ன மிஞ்சப் போகிறது. இச் செம்பி நாட்டின் வீரமெல்லாம் மெலிந்து விட்டது போலவும், அது எலும்பும் தோலுமாய், மரணப்படுக்கையில் கிடப்பது போலவும்,

கிடந்து பரிதாபமாக நம்மைப் பார்ப்பது போலவும், மரண விரதம் எடுப்பது போலவும், மரண சாசனமாக பத்திரமெழுதி நமக்களிப்பது போலவும், தோன்றுகிறது.

என்ன சொல்வேன்? “தொண்டையில் என்னவோ அடைகிறது! பேசமுடியவில்லையே!” தொண்டையைப் பிடித்த வண்ணம் இருந்து விடுகிறார்.

இப்பால் தலைவர் அனுமதியின் பேரில் தேவர் எழுந்தார். தலைவரான தாயுமானவருக்கு முதல் வணக்கமும் சேதுபதிக்கு மறுவணக்கமும் செய்தார். பேச, முற்பட்டார்.

“பன்னூறு ஆண்டுகட்கு முன்னே இந்தியாவை ஒரு குடைக்கீழ் ஆளமுற்பட்ட இணையில்லாத இளம் கிரேக்க வீரனான அலெக்சாண்டர், நம் நாட்டின் ஈடுசோடு அற்ற வீரர்களை மதித்து, தானே பின் வாங்கிப் போய்விட்டான்.

இத்தகைய நம் நாட்டில் போர்த்துக்கீசியர்கள் புகுந்து விட்டார்கள்.

சுதந்திரத்தைவிட சாவு ஒரு பெரிதா? சாவுக்குப் பயந்து இரத்தினத்தை- முத்து விளைகின்ற நாட்டைத் திருடர்களிடம் பறி கொடுப்பவருண்டா?

மரணத்துக்கு அஞ்சி மாணிக்கத்தைவிட எத்தனையோ பங்கு பெரிதான நம் நாட்டை மூதாதையர்களின் புண்ணிய பூமியை,

அநேக நூற்றாண்டுகளாக அன்னியர்களின் அடிச்சுவடு படாத நம் தாய்த் திருநாட்டை ஆயிரமாயிரம் ஆண்டுகளாக எத்தனையோ எதிரிகளின் முன்னிலையில் தலைநிமிர்ந்து நிற்கிற இச்செந்தமிழ் நாட்டைக் கேவலம் உயிருக்குப் பயந்து போர் புரியாமல் ஒப்படைத்து விடுவதா?

"போர்த்துக்கீசியர்களுக்கு, இந்நாடு வேண்டுமானல் இந் நாட்டில் மனிதப் பூண்டென்பதும் இல்லாமல் சுட்டு வீழத்திவிட்டு வேண்டுமானல் எடுத்துக் கொள்ளட்டும்!

சாவு என்பது என்ன? நீண்ட உறக்கம் போன்றதுதான். அது என்றிருந்தும் எல்லாருக்கும் ஏற்படத்தான் செய்கிறது. சாவாதவர் எவருமில்லை. உயிர்ப் பயத்தை உதறி எறியுங்கள்!

சோம்பலையும் அடிமைச் சாம்பலையும் ஊதி எறியுங்கள்! வீரக்கனல் மூண்டு எழுந்திருங்கள்!

வந்து விட்டார்கள் போர்த்துக்சீசியர்கள். கனவு கண்டிருக்க நேரமில்லை. அதிகம் பேசவும் காலமில்லை?" என்று சொல்லிக் கொண்டே.... உணர்ச்சி வேகத்தால் பக்கத்தில் வைக்கப் பெற்றிருந்த நீர் பருகும் ஒரு பாத்திரத்தை எடுத்து ஆவேசத்துடன் எறிகிறார். எதிரே இருந்த நிலைக் கண்ணாடி சுக்கு நூறாக சிதறுகிறது.

இவ்வளவில் எல்லாரது உள்ளங்களும் தீமுட்டபட்டுவிட்ட அக்கினி குண்டம் போல் ஆகிவிட்டன

சுவாமி தாயுமானவருக்கு வெற்றி என்ற வீரவொலி விண்ணைப் பிளந்தது.

எல்லோரும் அணியணியாக வந்து தாயுமானவரை மனமார வணங்கினார்கள். வாயரா வாழ்த்தினார்கள்.

அவ்வளவில், அதே வாரத்தில் முப்பதினாயிரம் வீரர்களடங்கிய பெரும்படை, போர்க்கோலம் பூண்டு, தாயுமானவர் அனுமதிப்படி - சேதுபதி தலைமையில் - இராமேசுவரம் தீவு நோக்கிப் புறப்பட்டது. தாயுமானவரும் புறப்படத் தயாரானார்.



## போர் முனையில் தளபதியானார் தாயுமானவர்.

சேதுபதியை நோக்கி. “நீங்கள் எல்லோரும் என்பின் வாருங்கள்” கூடியவரை இரத்தம் சிந்தாமலும் ஒரு உயிராவது சாகாமலும் போர் வெற்றிகரமாக முடிய வேண்டிய நிலைமைத் தேடி முன்னே செல்கிறேன்.

இந்த என் விரதத்தைத் தடுக்க வேண்டாம். நாம் அனைவரும் ஒரேயொரு ஒப்பற்ற தந்தையின் குழந்தைகள். நம்மில் வேறுபாடில்லை. மனிதகுலம் வாழ வேண்டும்.

ஆனால் மனவேற்றுமையும் இனவேற்றுமையும் மாற வேண்டும்.

நாசத்தை விளைவிக்கும் முறைகளை நாம் நாட வேண்டாம். மனிதனின் உள்ளுணர்வு மாபெரும் வெளியில் நம்மை அழைத்துச் செல்லும் என்றே நம்புகிறேன்.

எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும் என்று கூறிவிட்டுத் தாயுமானவர் முன்னணிச் சேனையில் முதல் தளகர்த்தன் போல் முன்னே போனார்.

பாம்பன் சென்றதும், படையைப் பாம்பன் தீவில் பாசறையில் பதிவிருக்கும்படி செய்தார். மேல்வரும் செய்தியை எதிர்பாக்கும்படி கூறினார். ஒரு சில தூதர்களுடன் தான் மட்டும் இராமேசுவரம் சென்றார்.

போர்த்துக்சீசியப் பாதிரிமார்கள் எல்லாரையும் ஒருங்கே கூட்டினார். ஒவ்வொரு மதமும் கூறும் தெய்வீக நெறியையும், கொலை கொள்ளையால் நேரும் கொடுமைகளையும் விரிவாக உருக்கமாக எடுத்துரைத்தார்.

அதைக் கேட்டளவில் அக் கிறிஸ்தவப் பாதிரிமார்கள் தாயுமான சுவாமியின் விருப்பத்திற்கு உறுதுணையளிப்பதாக உறுதி கூறினார்கள்.

ஆனால் கப்பற்படைத்த தலைவன் மட்டும் தன் படைச் செருக்கினால் தாயுமான அடிகளுக்குச் செவிசாய்க்க மறுத்தான்.

இப்புனிதமான ஞானபூமியில் நீங்கள் படையெடுத்திருப்பதில் கடவுளுக்குத் துளியும் சம்மதமில்லை. நீங்கள் வெளியேறிப் போய்விடுங்கள் என்று இறுதியாகக் கூறிவிட்டு தாயுமான அடிகள் திரும்பிவட்டார்.

இந்தச் சொற்கள் அவனுக்கு அம்புபோல் தைத்தன. முப்பதினாயிரம் வீரர்களுடன் சேதுபதி படையெடுத்து வருவதையும் கேள்வியுற்றான்.

அவ்வளவில், ஏற்கனவே குறிவைத்து இலங்கையிலிருந்து தன் படையை நோக்கி வந்து கொண்டிருந்த பெரும் டச்சுக் கப்பற்படையால் தாக்கப்பட்டு தனது கடற்படை சின்னா பின்னமாகச்

சிதறுண்டு அழிந்துபோன நிலையில், போர்த்துக்கீசியக் கப்பற்படைத் தலைவன் தலை கவிழ்ந்தான். சரணாகதியானான்.

எஞ்சிய பரிவாரங்களுடன் இராமேசுவரம் தீவினின்றும் புறப்படுமாறு அனுமதிப்பட்டபடி வெளியேறினான்.

இராமனாதபரம் வந்து சேர்ந்ததும் நம் தாயுமானவர், "இந்த ஒற்றுமை நிலைமை நாட்டில் என்றென்றும் நிலவ வேண்டும். மீண்டும் இச்சேதுபதியே நாட்டின் மன்னராகவேண்டும். இதுவே எனது விருப்பம்" என்றார்.

அதற்கு மக்கள் அனைவரும் சம்மதித்தனர். கிழவன் சேதுபதி என்கிற இரகுநாத சேதுபதி மீண்டும் சேது நாட்டு அரசரானார். நாட்டில் அமைதி நிலவியது.

இதையொட்டி ஒரு பாராட்டு விழாவிற்கு ஏற்படாயிற்று. இடம் அரசர் பூங்கா. இதையறிந்த தாயுமானவர் - துறவிக்கும் இதற்கும் தொடர்பில்லை என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

தாயுமானவர் ஆன்மீக ஞானிமட்டுமல்ல. அரசியல் ஞானியும் ஆவார்.